# பத்திரிகை செய்தி

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் அரசு பொறியியல் கல்லூரி உதவிப்பேராசிரியர்கள் தெரிவிற்கான போட்டி எழுத்துத் தேர்வு 22.10.2016 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையில் சென்னை, வேலூார், விழுப்புரம், சேலம், கோயம்புத்தூார், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 113 மையங்களில் நடைபெற உள்ளது.

தேர்வு மையத்திற்கு தேர்வர்கள் காலை 8.30 மணிக்கு தவறாது வருகை தரவேண்டும்.

தேர்வு மையத்தின் நுழைவு வாயிலிலேயே தேர்வர்கள் தங்களது உடமைகளை தங்களுடன் வருபவர்களுடன் ஒப்படைத்துவிடவேண்டும். தேர்வர்கள் கொண்டுவரும் விலை உயர்ந்த பொருட்களுக்கு அவர்களே பொறுப்பாவார்கள்.

கைபேசி, கைக்கணினி, மடிக்கணினி, தரவி ( அல்லது) கணக்குக் கருவிகள் மற்றும் மின்னனு கைக்கடிகாரம் (Mobiles, Palmtop, Laptop, Blue Tooth equipment (or) Calculator and Electronic wristwatch) போன்றவற்றை தேர்வு மையத்திற்குள் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

தேர்வர்கள் தங்களுடன் இரண்டு பந்துமுனை ( Ball Point Pen) பேனாக்களையும், தேர்வுக்கூட நுழைவுச் சீட்டினை மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர். கைக்குட்டை உட்பட வேறு எந்த ஒரு பொருளையும் தங்களுடன் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தேர்வர்கள் காலை 9.00 மணிக்குள் தேர்வு மையத்திற்கு வந்துவிட வேண்டும். காலை 9.00 மணிக்கு மேல் வருகை தரும் தேர்வர்கள் அம்மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளரின் அனுமதியுடன் தேர்வு மையத்தில் அனுமதிக்கப்படுவர். எனினும் காலை 9.30 மணிக்கு மேல் எந்த ஒரு தேர்வரும் தேர்வு மையத்திற்குள் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

தேர்வர்கள் காவல்துறை அலுவலர்கள் உதவியுடன் முழுச் சோதனை (Frisking ) அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் செய்யப்பட்டு அதன்பிறகு தேர்வு மையத்தினுள் அனுமதிக்கப்படுவர்.

Frisking முடிந்த பின் தேர்வர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தனித்தனியே ஆண்கள் மற்றும் பெண்களுக்கென உள்ள காத்திருக்கும் அறைகளில் (waiting room) தேர்வறைகளுக்கு செல்லவேண்டிய நேரமான காலை 9.30மணிவரை காத்திருக்கவேண்டும்.

உறுப்பினர் செயலர்.